# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : இந்திய அரசியலமைப்பு

பகுதி : **மனித உரிமைகள் பட்டயம்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# மனித உரிமைகள் பட்டயம்

## மனித உரிமைகள்

- ஒவ்வொரு மனிதருக்கும் உள்ள தடுக்க முடியாத பிரிக்க இயலாத நியாயமான உரிமைகளே மனித உரிமைகள் ஆகும்.

**மனித உரிமைகளை உள்ளடக்கியவை :**

- வரதட்சனை முறை
- பர்தா முறை
- பாலியல் வன் கொடுமை
- தீண்டாமை
- சமூக பாகுபாடுகள்
- கொத்தடிமை
- குழந்தைத் தொழிலாளர்
- சாதிய மற்றும் மத வன் கொடுமைகள்

**அரசாங்கச் சட்டங்கள்**

- 1829 - சதி ஒழிப்பு திட்டம் : வில்லியம் பெண்டிங் பிரபு &ராஜாராம் மோகன்ராய்
- 1856 - விதவை மறுமண சட்டம்
- 1929 - சாராதா சட்டம்
- 1955 - தீண்டாமை சட்டம்
- 1961 - வரதட்சணை தடுப்பு சட்டம்
- 2001 - உணவுக்கான உரிமை
- 2005 - தகவல் அறியும் உரிமை
- 2006 - வேலைவாய்ப்பு உரிமை
- 2010 - கல்வி உரிமை

**அரசியல் அமைப்புச் சட்டங்கள்**

- அடிப்படை உரிமைகள் - பகுதி III (சரத்துகள் 14 - 32)
- DPSP - பகுதி IV (சரத்துகள் 36 -51)

**ஐ.நா. மனித உரிமை சரத்துகள்**

- சரத்து 1 - சமத்துவ, சுதந்திர உரிமை, சகோதரத்துவத்துடன் செயல்படல்
- சரத்து 2 - இன, மொழி , அரசியல் பாகுபாடின்றி எல்லா உரிமைகளும் உண்டு.
- சரத்து 3 - சுதந்திரமாக பாதுகாப்பாக வாழ உரிமை
- சரத்து 4 - யாரையும் அடிமையாக நடத்தகூடாது
- சரத்து 5 - யாரையும் மனிதாபிமானமற்ற முறையில் தண்டிக்கக்கூடாது.
- சரத்து 6 - சட்டத்தின் முன் தனிநபராக வாழ உரிமை
- ஐ.நா. மனித உரிமை ஆணையம் **1948 முதல் டிசம்பர் 10 யை** மனித உரிமை நாளாக கொண்டாடி வருகிறது.

**தற்போதைய தேசிய மனித உரிமைகள் ஆணைய தலைவர் ஹெச்.எல்.தத்து**

**சர்வதேச மனித உரிமை உடன்படிக்கை**
ஐ.நா. பொது சபையால் டிசம்பர் 16, 1966 ஆம் ஆண்டு குடியுரிமை மற்றும் அரசியல் உரிமை உடன்படிக்கை மற்றும் சமூக, பொருளாதார பண்பாட்டு உரிமை உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டது.

## தேசிய மனித உரிமை ஆணையம்

- ❖ மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் அக்டோபர் 12,1993ன் படி தேசிய மனித உரிமைகள் ஆணையத்தை பாராளுமன்றம் சட்டம் மூலம் உருவாக்கியது.
- ❖ இது ஒரு தலைவரையும் நான்கு உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. உச்சநீதிமன்றத்தின் ஒய்வு பெற்ற நீதிபதி இதன் தலைவராக இருப்பார்.
- ❖ ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் குடியரசுத் தலைவர், பிரதமரைத் தலைவராகக் கொண்ட 6 பேர் கொண்ட குழுவின் பரிந்துரைப்படி நியமனம் செய்கின்றனர்.
- ❖ பதவிக்காலம் **5 ஆண்டுகள் அல்லது 70 வயதுவரை** பதவியில் இருப்பர்.

பதவிக்காலம் முடிந்த பிறகு மத்திய அரசிலோ, மாநில அரசிலோ எந்தப் பதவியிலும் இருக்கக் கூடாது.

## மாநில மனித உரிமை ஆணையம்

- ❖ மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் அக்டோபர் 12,1993ன் படி தேசிய மனித உரிமைகள் ஆணையத்தை பாராளுமன்றம் சட்டம் மூலம் உருவாக்கியது
- ❖ தமிழ்நாட்டில் **1997-ஆம் ஆண்டு ஏப்ரல் 17-**ஆம்நாள் மாநில மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்டது.
- ❖ பதவிக்காலம் **5 ஆண்டுகள் அல்லது 70 வயதுவரை** பதவியில் இருப்பர்.
- ❖ பதவிக்காலம் முடிந்த பிறகு மத்திய அரசிலோ, மாநில அரசிலோ எந்தப் பதவியிலும் இருக்கக் கூடாது.